2024 ஜூன் 25]

மற்றும் ஆர்.கே. பேட்டை ஒன்றியத்தில் செருக்கனூர் மற்றும் 114 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.44.28 கோடி மதிப்பீட்டிலும் என ஆக மொத்தம் 2 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் ரூ.47.92 கோடி மதிப்பீட்டில் செயலாக்கத்தில் உள்ளன. இத்திட்டங்கள் விரைவாக முடிக்கப்பட்டு, 59 ஆயிரம் மக்களுக்கு 3.18 MLD *குடிநீர் வழங்கப்படும்.*

மேலும், தேர்வாய்க்கண்டிகை நீர்த்தேக்கத்திலிருந்து மீஞ்சூர் மற்றும் சோழவரம் ஒன்றியங்களுக்கு ஒரு புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்காகத் திட்ட மதிப்பீடு சுமார் ரூ.400 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு வருகிறது. மேலும், நேமம் ஏரியை நீராதாரமாகக் கொண்டு பூந்தமல்லி, கடம்பத்தூர் மற்றும் வில்லிவாக்கம் ஒன்றியங்களுக்குக் குடிநீர் வழங்க ரூ.110 கோடி மதிப்பீட்டில் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய கழகத் தலைவர் தளபதி அவர்கள் பொறுப்பேற்பதற்கு முன்பு, தமிழ்நாட்டில் 428 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் மூலமாக 4.18 கோடி மக்களுக்குக் குடிநீர் வழங்கப்பட்டு வந்தது. இப்போது இந்த 3 ஆண்டுக்காலத்தில் மேலும் 1.5 கோடி மக்களுக்கும் இன்னும் 6 மாதக் காலத்தில் 1.15 கோடி மக்களுக்கும், இந்த ஆண்டு தரப்பட்டிருக்கின்ற திட்டங்கள் நிறைவேறுமானால், 7 கோடி மக்களுக்கான குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுவிடும். மீதமுள்ள 1 கோடி மக்களுக்குத்தான் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட வேண்டும். அதற்காகவும் திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. நம்முடைய தளபதி அவர்களுடைய ஆட்சியிலேயே விரைவில் 8 கோடி மக்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படும். அதற்கான அனைத்துப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. திருவள்ளூர் தொகுதிக்குத் தேவையான அத்தனை திட்டங்களும் நம்முடைய தளபதி அவர்களுடைய அனுமதியைப் பெற்று நிறைவேற்றித் தரப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர், மூன்று நாள் கேள்விகளுக்கும் சேர்த்து ஒரே நாளில் பதில் சொல்லிவிட்டீர்கள்.*

வினா வரிசை எண் 82, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ராஜகுமார், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

82—

வருவாய் கோட்ட அலுவலகக் கட்டடம்

***24945—திரு. S. ராஜகுமார்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை வருவாய் கோட்ட அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை பேரவைக்கு அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறை வருவாய் கோட்ட அலுவலகம் கட்டுவது தொடர்பான கருத்துரு அரசளவில் ஏதும் நிலுவையில் இல்லை. மேற்படி கட்டடம் கட்டுவது தொடர்பாக உரிய மதிப்பீட்டறிக்கை பொதுப் பணித் துறையிடமிருந்து பெறப்பட்டு, கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரிடமிருந்து கருத்துரு பெறப்படும்போது நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ராஜகுமார் அவர்கள்.

திரு. S. ராஜகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி கோட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கிட்டத்தட்ட 100 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமையான, செங்கல் சுவர் கட்டடமாகும். அது நீண்ட நாட்களாக repair செய்து, repair செய்து பயன்படுத்தப்பட்டு வருகிறது. அது தற்போது

2024 ஜூன் 25]

பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. கணினி உள்ளிட்ட சாதனங்களை அங்கு வைத்து பயன்படுத்த முடியாத நிலை இருக்கிறது.

மயிலாடுதுறை ஒரு புதிய மாவட்டமாகும். அங்கு R.D.O.*-க்கு இல்லமும் இல்லை. அவருடைய இல்லத்தை மாவட்ட ஆட்சியர் அவர்கள் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றார்.* R.D.O. *அவர்களுக்கு இல்லமும் இல்லை; அலுவலகமும் சரியாக இல்லை. நேற்றையதினம் பொதுப் பணித் துறை இதுகுறித்து திட்ட மதிப்பீடு அனுப்பியிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று, மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இந்தக் கோட்டாட்சியர் அலுவலகத்திற்கு ஒரு புதிய கட்டடத்தை கட்டுவதற்காவது அனுமதிக்க வேண்டுமாய் தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகின்றேன்.*

முற்பகல் 10-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறையிலிருந்து ஒரு மதிப்பீடு வந்திருக்கிறது. நீங்களும் எனக்குத் தகவல் கொடுத்திருக்கிறீர்கள். அதற்குரிய தகுந்த நடவடிக்கையை நிதித் துறையோடு கலந்து பேசி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுசென்று, நிச்சயமாக அதனைச் செய்து கொடுப்போம். உங்களுக்குத் தாலுகா அலுவலகமே புதிதாகக் கட்டிக் கொடுத்திருக்கிறோம். தற்போது* R.D.O. office *புதிதாகக் கேட்கிறீர்கள். இரண்டையுமே கேட்கிறீர்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* S. *ராஜகுமார் அவர்கள்.*

திரு. S. ராஜகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுமட்டுமல்ல மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, இடம் வாங்கி, மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் கட்டி முடிக்கப்பட்டு, அதனையும் திறந்து வைத்துவிட்டார்கள். மேலும் இது புதிய மாவட்டம். வரலாற்றுச் சிறப்புமிக்க கட்டடம்;* Main Road*-ல் இருக்கக்கூடிய ஒரு கட்டடம் என்பதால் புதிதாகக் கட்டிக் கொடுக்க*